**செய்தி வெளியீடு எண்: 740** **நாள்: 01.11.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (1.11.2019) தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், பையனூரில் உள்ள எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் அருகில் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள அம்மா படப்பிடிப்பு தளத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், பையனூரில் 26.8.2018 அன்று நடைபெற்ற திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் திறப்பு விழாவில், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் சார்பில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் அருகில் அரங்கம் கட்டித்தருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. அவர்களது கோரிக்கையினை கனிவுடன் ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரில் அரங்கம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 5 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, முதல் கட்டமாக 1 கோடி ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.9.2019 அன்று தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் திரு.ஆர்.கே. செல்வமணி அவர்களிடம் வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து, தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், பையனூரில் உள்ள எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் அருகில் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள அம்மா படப்பிடிப்பு தளத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், “பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா, இருபெரும் தலைவர்களுடைய பெயரிலே உங்களுடைய திரைப்படத் துறைக்கு ஒரு அற்புதமான படப்பிடிப்புத் தளத்தை நீங்கள் அமைத்திருக்கின்றீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், படப்பிடிப்பிற்கு, வெளியே சென்று படம் பிடிக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றி,

தமிழகத்திலே, அதுவும் தொழிலாளர்கள் அனைவரும் இணைந்து உருவாக்கிய அந்தத் தளம் மேலும், மேலும் வளர்ந்து இந்தியாவிலேயே சிறந்த படப்பிடிப்புத் தளமாக அமைய என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் திரு.ஆர்.கே. செல்வமணி, பொதுச் செயலாளர் திரு. அங்கமுத்து சண்முகம், பொருளாளர் திரு. பி.என். சாமிநாதன், துணைத் தலைவர்கள் திரு. தீனா மற்றும் திரு. ஸ்ரீதர், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.ஆர்.வி. உதயகுமார், திரு. லியாகத் அலிகான் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

**நாள்: 1.11.2019**